விவிலியப் படக்கதை - 13

சாலமோன்



சாலமோன்

தாவீது அரசர் உருவாக்கிய பேரரசின் புகழ் சாலமோன் அரசர் காலத்தில்தான் (கிமு 970-931) அதன் சிகரத்தை எட்டுகிறது. தாவீதின் மிக அன்புக்குரிய மனைவி பத்சேபாவின் இரண்டாவது மகன் சாலமோன் ஆவார். அன்னையின் உதவியினால் சாலமோன் அரியணையைப் பெறுகிறார்.

இஸ்ரயேலில் மிகவும் ஞானம் நிறைந்த அரசராக விவிலியம் சாலமோனை வருணிக்கிறது. இரண்டு திருப்பாடல்களும், இனிமை மிகு பாடல், நீதிமொழிகள், சபை உரையாளர், சாலமோனின் ஞானம் ஆகிய நூல்களும், சாலமோன் எழுதியதாகக் கருதப்படு-கின்றன. இயேசு கூட சாலமோனின் ஞானம் பற்றி குறிப்பிடுகிறார் (மத் 6:29 & லூக் 11:31).


சாலமோன் அறிவியல், ஓவியம், கட்டிடம் எனப் பலவித கலைகளை ஊக்குவித்து வளர்க்கிறார். அவரது அரசின் மிகப் பெரிய சாதனை எருசலேம் ஆலயமாகும். இவரது அரசவையில் அறிஞர்களும், எழுத்தாளர்களும் பலர் தங்கி இருக்கிறார்கள். இஸ்ரயேல் செல்வம் மிகுந்த புகழ்பெற்ற ஒரு நாடாக மலர்கிறது.

திருமண ஒப்பந்தங்கள் வழியாகவும், அரசியல் திறமையாலும் தன் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அமைதி நிலவச் செய்கிறார் சாலமோன். வலுவான ஒரு படையைக் கட்டி எழுப்புகிறார். இவ்வாறு இஸ்ரயேலைத் தாக்கத் துணிவுள்ள பகைவர்களை விரட்டியடிக்கிறார்.

சாலமோனின் சாதனைகள் பலவாயிருந்தாலும் இஸ்ரயேலின் வீழ்ச்சிக்கும் அவரே காரணமாகிறார். பிற இன மனைவியருக்காக அவர் கட்டிய கோவில்களும், புனித இடங்களும் சிலைவழிபாடு வளர உதவுகின்றன. யாவேயோ, இஸ்ரயேல் மக்களோ அல்ல, மாறாக தாவீது அரசர்தான் இவரை அரசராக்குகிறார். இவ்வாறு அரசரின் வாரிசு அரியணை ஏறும் புதிய மரபு இஸ்ரயேலில் உருவாகிறது. இதனால் அரசர் முழு சுதந்திரம் உள்ளவராகவும், பொறுப்பற்றவராகவும், யாருக்கும் விளக்கம் கொடுக்க தேவையில்லாதவராகவும் மாறுகிறார். இஸ்ரயேலில் அதிகார துஷ்பிரயோகம் ஆரம்பமாவதையும் இங்கு பார்க்கிறோம்.

செல்வத்தையும் அதிகாரத்தையும் தவறாகப் பயன்படுத்தியதே சாலமோனின் அரசு வீழ்ச்சியடைவதை துரிதப்படுத்துகிறது. வலிமையான படை அவரிடம் இருந்த போதிலும், அதைப் பயன்படுத்தப் போதுமான திறமை அவரிடம் இல்லை. அவரது தந்தை கைப்பற்றிய நாடுகளைப் பாதுகாக்க அவரால் முடியவில்லை. ஏதோம், தமஸ்கு

விவிலியப் படக்கதை - 13




சாலமோன்

எல்பின்
தியோ




நான் விழித்திருக்கும்போது என் நினைவுகள் என்னைப் பயமுறுத்துகின்றன. நான் தூங்கும்போதும் பயங்கரமான கனவுகள் என்னை அச்சுறுத்துகின்றன.
நீங்கள் உண்மையிலேயே பயப்படுகிறீர்களா?
வாழ்பவர்களைக் கண்டு எனக்கு அச்சமில்லை. இறந்தவர்களைக் கண்டுதான் நான் பயப்படுகிறேன். நான் இரத்தத்தைப் பார்க்கிறேன். நான் கொன்ற மக்களின் இரத்தம் அது.
ஆனால் அரசே, அவர்கள் எல்லோரும் கடவுளது மக்களின் எதிரிகள்தானே.
இந்தப் பேரரசை நிறுவ எவ்வளவு மாசற்றவர்களின் இரத்தத்தைச் சிந்தியிருக்கிறேன் தெரியுமா? என்னால் இதைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. கொடு அந்த மருந்தை.
ஆண்டவரே, என் மேல் இரக்கமாயிரும்.


வயதான அரசரால் நாட்டின் எல்லா பிரச்சனைகளிலும் போதுமான கவனம் செலுத்த முடியவில்லை. இளவரசர்களிடையே அரசியல் சூழ்ச்சிகள் எழுகின்றன. ஒருநாள் நாத்தான் இறைவாக்கினர் பத்சேபாவிடம் வருகிறார்.
அதோனியா தன்னை அரசராகப் பிரகடனப்படுத்தப் போகிறான் என்பதை நீ கேள்விப்பட்டாயா?
அதோனியாவா? அப்படின்னா, அரசர் எனக்குத் தந்த வாக்குறுதி என்ன ஆனது?
நாட்டில் என்ன நடக்குது என்பது பற்றி அரசருக்கு எதுவும் தெரியாது. நாம் ஏதாவது விரைவாக செய்யாவிட்டால்... நாம் இழக்கப் போவது அரியணை மட்டுமல்ல...
நாம் நாட்டின் துரோகிகளாகக் கருதப்படுவோம். ஆனால் நாம் இப்போது என்ன செய்யலாம்?
!
நீ அரசரை உடனடியாகச் சந்திக்க வேண்டும். நீ பேசிக் கொண்டிருக்கும் தருணத்தில் நான் உள்ளே வருகிறேன்.


பத்சேபா, என் அன்பே உள்ளே வா. வந்து என் அருகே உட்காரு. நீயும் சாலமோனும் எப்படி இருக்கிறீர்கள்?
எங்கள் வாழ்வு ஆபத்தில் இருக்கிறது தலைவா.
அது எப்படி பத்சேபா? நீ அழுது கொண்டிருக்கிறாயா?
அதோனியா அரசராகும்போது நாங்கள் வேறென்ன செய்ய முடியும்?
அதோனியாவை அரசராக்கியது யார்? சாலமோன் என்னைத் தொடர்ந்து ஆட்சி செய்வான் என நான் உனக்கு வாக்குறுதி கொடுத்தேனே?!
!
நீங்கள் இன்னும் அதை நினைவில் வைத்திருக்கிறீர்கள் என்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி தருகிறது. இதோ நாத்தான் இறைவாக்கினர் வருகிறார். நான் போகட்டுமா?


நாத்தான் இறைவாக்கினரே, நான் அதோனியா பற்றி இப்படியெல்லாம் கேள்விப்படுகிறேனே?
ஆமாம், அரசே! அதோனியா பல மாதங்களாக சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிறான். இன்று காலை அபியத்தார் அவனை அரசராகத் திருப்பொழிவு செய்துள்ளார். படைத்தலைவர் யோவாபும் அவனுடன் சேர்ந்துள்ளார். இப்போது எல்லா இளவரசர்களுக்கும் அவன் விருந்து கொடுக்கிறான்.
!?
இல்லை. இதை நான் ஒரு போதும் அனுமதிக்க மாட்டேன். பெனாயாவையும் சாதோக்கையும் கூப்பிடுங்கள்.
எப்படியாயினும் இளவரசர் சாலமோனை அவன் அழைக்கவில்லை. படைத்தலைவர் பெனாயா, தலைமை குரு சாதோக்கு, மற்றும் என்னையும் புறக்கணித்து உள்ளான்.
அரசே, உமது நம்பிக்கைக்குரிய எல்லாருடைய உயிரும் இப்போது ஆபத்தில் உள்ளது.


சாலமோன் அரசர், நீடுழி வாழ்க.
தாவீது அரசரின் கட்டளைப்படி, அவர்கள் சாலமோனுக்குத் திருப்பொழிவு செய்கிறார்கள். அவனை அரசரின் கோவேறு கழுதைமீது அமர்த்தி பவனி வருகிறார்கள்.
அதே நேரம் அதோனியா இருந்த இடத்திலே....
என்ன சப்தம் கேட்கிறது? புலம்பலா? அப்பா இறந்து விட்டாரோ?
இல்லை. இது அழுகையின் குரல் அல்ல, ஆரவாரம்... அதோ! குருவின் மகன் யோனத்தான் வருகிறான்.
!!



வா யோனத்தான். அங்கே என்ன? ஒரே ஆரவாரமாயிருக்குதே?
அவர்கள் சாலமோனை அரசராக அறிவித்துள்ளார்கள். அரசரின் கோவேறு கழுதை மீது அமரவைத்து ஊர்வலம் வருகிறார்கள்.
?!
நாம் அழிந்தோம்.
அதோனியாவுடனிருந்தவர்கள் ஓடி ஒளிந்து கொள்கிறார்கள். அதோனியா ஆலயத்தில் அடைக்கலம் புகுகிறான். இதைக் கேள்விப்பட்ட சாலமோன்
அதோனியாவை வீட்டுக்குப் போகச் சொல்லுங்கள். அவன் குற்றமற்றவனாக இருந்தால் அவனுக்கு எதுவும் நேராது.
!


போற்றுவோம் யாவேயை. போற்றுவோம் அவரை. அவரது அன்பு நிலையானது. என் மகன் அரியணையில் அமர்வதை நான் காண அவர் அனுமதித்திருக்கிறார்.
சாலமோன், நம் எதிரிகள் யார் என்பது உனக்குத் தெரியும். அவர்கள் உன்னைச் சுற்றி வாழும் வரை நீ பாதுகாப்பாக இருக்க முடியாது.
நீ என்ன செய்ய வேண்டும் என்பதை தெரிந்து கொள்ள போதுமான ஞானம் உன்னிடம் உள்ளது.
அப்பா, கவலைப்படாதீர்கள். நான் அவர்களைப் பார்த்துக் கொள்கிறேன்.


சாலமோன் அரியணை ஏறிய சிறிது காலத்திலேயே தாவீது இறக்கிறார். இரண்டு மாதங்களுக்குப் பின்...
அம்மா! தயவு செய்து உள்ளே வாங்க.
!
மகனே, அதோனியாவுக்கு ஒரு உதவி கேட்பதற்காக நான் இங்கு வந்துள்ளேன்.
நிச்சயமாக! சொல்லுங்கள் செய்கிறேன்.
உனக்கு அப்பாவின் பணிப் பெண் அபிசாகைத் தெரியும் தானே?! அவளை அதோனியாவுக்குத் திருமணம் செய்து கொடுப்பதில் உனக்கு ஆட்சேபனை உண்டா?
!!


அவனுக்காக அரியணையையும் கேட்டிருக்கலாமே! அவன் மூத்தவன் இல்லையா?
அம்மா, அபிசாகு வெறும் பணிப்பெண் மட்டுமல்ல. அவள் அப்பாவின் கடைசி மனைவி. அதோனியா அவளை மணந்தால் அவன் அப்பாவின் அரியணைக்கு உரிமையுள்ள வாரிசு ஆவான்.
நீ ஏன் அப்படி சொல்கிறாய்? பணிப் பெண்ணை அவன் திருமணம் செய்ய அனுமதிப்பதில் என்ன தவறு இருக்கிறது?
!?
ஐயோ மகனே! அவன் நமக்கெதிராக இவ்வளவு பெரிய சதி செய்வான் என்று எனக்குத் தெரியாது.
அதோனியா, இதற்காக நீ சாக வேண்டும். உன் அழிவை நீயே தேடிக் கொண்டாய்.



அதோனியா கொல்லப்பட்டதை அறிந்த யோவாபு தப்பியோடி ஆண்டவரின் கூடாரத்தில் அடைக்கலம் புகுகிறார்.
யோவாபு கூடாரத்திலிருந்து வெளிவர மறுக்கிறார்.
அவரை அங்கேயே கொல்லுங்கள். அவர் செய்த குற்றங்களுக்காக தன்னையே பலியாக்கட்டும்.
சாலமோன் ஒருவர்பின் ஒருவராக தன் எதிரிகள் அனைவரையும் அழிக்கிறார். ஒருநாள் அவர் ஒரு கனவு காண்கிறார்.
நீ என் அருளுக்குரியவனாய் இருக்கிறாய். உனக்கு என்ன வேண்டுமோ கேள்.



ஆண்டவராகிய கடவுளே, உமக்குச் செவிசாய்க்கும் மனதைத் தாரும். உம் சட்டத்திற்கேற்ப இம்மக்களை ஆட்சி செய்ய உமது ஞானத்தைத் தாரும்.
உன்னுடைய வேண்டுதலைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். நீ அதிகாரத்தையோ, மதிப்பையோ கேட்கவில்லை. உன்னை உலகிலேயே அதிக ஞானமுடையவனாக்குவேன்.
'நீ என் கட்டளைப்படி வாழ்ந்தால் உன் அரியணை என்றென்றும் நிலைத்திருக்கும். உன்னை செல்வமும் ஆற்றலும் உடையவனாக்குவேன்.



சாலமோனின் ஞானமும் அறிவும் பெரும் புகழ் பெற்றன. ஒருநாள்...
மூன்று நாட்கள் வித்தியாசத்தில் எங்களுக்கு மகன்கள் பிறந்தார்கள். ஒருநாள் இரவு தூக்கத்தில் அவள் தன் மகன் மேல் புரண்டு, கொன்றுவிட்டாள்.
அரசே, இந்தப் பெண் என் குழந்தையைக் களவு செய்து விட்டாள்.
இல்லை அரசே, இது ஒரு பொய்.
!
அவள் குழந்தை இறந்து விட்டதைப் பார்த்ததும் அவள் என் குழந்தையை எடுத்துக் கொண்டாள். நான் காலையில் விழித்துப் பார்க்கையில் இறந்த குழந்தை என் அருகே கிடப்பதைக் கண்டேன். அரசே என் குழந்தையை எனக்குப் பெற்றுத் தாரும்.


காவலா, ஒரு வாள் கொண்டு வா.
!!
இது என் குழந்தை. அவள் குழந்தைதான் இறந்தது.
குழந்தையை இரண்டாக வெட்டி, ஒவ்வொருவருக்கும் ஒரு துண்டு கொடு.
!
!?


பாதியென்றாலும் சரி. அவளுக்கு என் குழந்தையைக் கொடுக்கமாட்டேன்.
வேண்டாம் அரசே. குழந்தையைக் கொல்ல வேண்டாம். அவளே வைத்துக் கொள்ளட்டும்.
!
தாய் தான் குழந்தையின் உயிரை மிக மேலானதாகக் கருதுவாள். குழந்தையை அவளுக்குக் கொடு. மற்ற பெண்ணைச் சிறையில் தள்ளு.
சாலமோன் தனது அரசை பன்னிரு மாகாணங்களாகப் பிரிக்கிறார். ஒவ்வொரு மாகாணமும் அரசருக்கும் அரண்மனையிலுள்ளவர்களுக்கும் ஒரு மாதத்திற்குரிய செலவைக் கொடுக்க வேண்டும்.
அது மட்டுமன்றி முப்பது கொழுத்த பசுக்கள், எருதுகள், எல்லா வகையான விலங்குகளும்...
எண்ணற்ற வாத்துகள், கோழிகள், முட்டைகள்... இவற்றையும் மறந்து விடாதீர்கள்
ஒரு நாளைக்கு நூறு ஆடுகள். அரண்மனையில் எவ்வளவு சாப்பிடுறாங்க?!



சாலமோன் ஆற்றல் வாய்ந்த
ஒரு பெரிய படையைக்
கொண்டிருக்கிறார்.
ஆயிரக்கணக்கான தேர்களும்,
குதிரை வீரர்களும் இருந்தார்கள்.
நூற்றுக்கணக்கான கப்பல்கள்
கொண்ட ஒரு பெரிய கப்பற்
படையும் அவருக்கு இருக்கிறது.


லெபனோனிலிருந்து கடல் வழியாக
கேதுரு, நூக்கு மரங்களை அவர்கள்
கொண்டு வருகிறார்கள்.
தீர் நாட்டு தேர்ச்சி பெற்ற கட்டட
கலைஞர்கள் கட்டுமானப் பணிகளை
மேற்பார்வை இடுகிறார்கள்.



ஏழு வருடங்களில் மிகப் பிரம்மாண்டமான ஆலயம் ஒன்றைக் கட்டி முடிக்கிறார்.
கோவில் அர்ப்பண விழாவிற்காக இஸ்ரயேல் மக்கள் எல்லோரும் எருசலேமில் கூடுகிறார்கள். 1,20,000 செம்மறி ஆடுகளையும், 22,000 காளைகளையும் பலியிடுகிறார்கள்.



சாலமோன் தனக்காக பல அழகிய அரண்மனைகளைக் கட்டுகிறார்.
பலமான கோட்டைகளும், பெரிய பண்டக சாலைகளும் நாட்டின் பல பகுதிகளில் கட்டப்படுகின்றன.


சாலமோன் பல நாடுகளோடு வியாபாரம் செய்கிறார். தந்தம், சந்தனம், குரங்குகள், மயில்கள் போன்றவற்றை இந்தியாவிலிருந்து வாங்குகிறார்.





சாலமோன் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துகிறார். அவர்கள் இஸ்ரயேலின் வரலாற்றை எழுதத் தொடங்குகிறார்கள். ஐந்நூலின் ஒரு பகுதியான யாவே மரபு உருவாகிறது.




தாவரவியல், விலங்கியல், வானவியல் போன்ற அறிவியல்களையும் ஊக்கப்படுத்துகிறார்.
பல அரசியல், சட்ட பள்ளிகளை நிறுவுகிறார். பல நாட்டு மேதைகள் இவரது அரசவையில் வாழ்கிறார்கள். சட்டம் பற்றிய வாதம் அறிஞர்களிடையே நடக்கிறது.
யாவே மோசே வழியாக தந்த சட்டங்களோடு இவற்றை ஒப்பிடும்போது இவையெல்லாம் ஒன்றுமில்லை.
!
பாரவோன் அமினோபெசின் சட்டப்படி...
இந்த பிரச்சனையில் பாபிலோனிய ஹமுராபியின் சட்டமே மேலானது.


மத்திய கிழக்கு நாடுகளில் சாலமோன் தான் மிகவும் ஞானமுள்ளவர். அவர் ஆயிரக் கணக்கான பாடல்களும், நீதிமொழிகளும் இயற்றியுள்ளார். இதைக் கேள்விப்பட்ட சேபா நாட்டு அரசி பல பரிசுப் பொருட்களுடன் அவரைச் சந்திக்க வருகிறார்.
உம்மைப்பற்றி எல்லோரும் மிகைப்படுத்தி பேசுகிறார்கள் என்று நினைத்தேன். ஆனால் உமது ஞானத்தில் பத்தில் ஒரு பகுதியைக் கூட அவர்கள் எனக்குச் சொல்லவில்லை என்று இப்போது உணர்கிறேன்.


சாலமோன் பக்கத்து நாடுகளோடு சமாதான ஒப்பந்தம் செய்து கொள்கிறார். அவர்களது புதல்வியரைத் திருமணம் செய்து கொள்கிறார். பாரவோனின் மகளைத் திருமணம் செய்த போது...
திருமணப் பரிசாக எகிப்தின் பகுதிகளான காசாவையும் கெசேரையும் உனக்குத் தருகிறேன்.
நமது நட்பும் உறவும் என்றென்றும் நீடிக்கும்.
பிற இன இளவரசியர்கள் தங்கள் சிலைகளையும் அர்ச்சகர்களையும் எருசலேமுக்குக் கூட்டி வருகிறார்கள்.


சாலமோன் தன் மனைவியரின் கடவுளருக்காக கோவில்களையும், புனித இடங்களையும் கட்டுகிறார். இவ்வாறு சிலைவழிபாடு எருசலேமில் ஆரம்பமாகிறது.
கட்டிட செலவுக்காக சாலமோன் மக்களிடமிருந்து மிக அதிகமான வரி வசூல் செய்கிறார்.
மீதி வரியையும் நீ கட்டவில்லையென்றால் பண்படுத்துவதைப் பற்றி நினைக்க உனக்கு நிலம் கூட இருக்காது.
நீ என்ன அநீதியான வேலை செய்கிறாய்? என் எருதுகள் இல்லாமல் நான் எப்படி நிலத்தைப் பண்படுத்துவேன்.


பல்லாயிரக்கணக்கான வேற்று நாட்டினரும் இஸ்ரயேலரும் அடிமைகளாக வேலை செய்யக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.
ஏய்... முட்டாள்... இழு.
இது ரொம்ப கொடுமை.
யாவே நம்மை விடுதலை செய்தார். ஆனால் இந்த அரசர்கள் மீண்டும் நம்மை அடிமைகளாக்கி விட்டார்கள்!
நாம் கட்டுகிறோம். அவர்கள் உல்லாசமாக வாழ்கிறார்கள்...! இரத்த உறிஞ்சிகள்!
ஏய், மேற்பார்வையாளன் கேட்டால் உன் தலையைக் கொய்து விடுவான்.
அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை.


கடவுளின் மனிதரான அகியா சாலமோனிடம்
நீர் யார்?
நீ என்ன செய்தாய்? என் ஊழியன் தாவீதின் அரியணையைத் தீட்டுப்படுத்தி விட்டாயே.
கடவுளின் வார்த்தையை அறிவிக்கும் குரல் நான்! நீ என் புனித நகரைச் சிலைகளால் நிரப்பிவிட்டாயே!
நான் யாவேக்காக அழகான கோவில் ஒன்று கட்டவில்லையா? என் மனைவியர் வழிபட சில திருத்தலங்கள் கட்டியதில் என்ன தவறு?
நான் விடுதலை செய்த மக்களை நீ அடிமையாக்கியுள்ளாய். அவர்களுக்கு நீதியை மறுத்தாய். உன் ஆட்சியை மிகவும் வெறுக்கிறேன். என் ஊழியன் தாவீதின் பொருட்டு உன்னைக் கொல்லாமல் விடுகிறேன். ஆனால் உன் இறப்புக்குப்பின் உன் அரசு அழிக்கப்படும்...



இறைவாக்கினர் சென்ற பின்...
என் இறப்புக்குப் பின் என்ன நடந்தால் எனக்கென்ன?
நான் வாழ்வது ஒரேயொரு முறை. அதை நான் கடைசி வரை அனுபவிக்கப் போகிறேன்.
சாலமோன் தன் படைத்தலைவருடன்...
உங்கள் தந்தையால் கொல்லப்பட்ட ஏதோமிய மன்னன் அதாது பற்றி ஞாபகம் இருக்கிறதா? அவனது மகன் எகிப்திலிருந்து திரும்பி வந்து மக்களை உமக்கெதிராக தூண்டி விடுகிறான்.
நீ அவனை ஒன்றும் செய்யவில்லையா? தூக்கில் போடு.
அரசே, அது அவ்வளவு எளிதானதல்ல. அவனுக்கு பாரோன் மன்னரின் ஆதரவு இருக்கிறது.
!?


கடவுள் இறைவாக்கினர் அகியாவை சாலமோனின் மேற்பாவையாளரான எரொபவாமிடம் அனுப்புகிறார்.
எரொபவாம் நீ எப்படி அடிமைகளிடம் இவ்வளவு கொடூரமாக நடந்து கொள்கிறாய்?
அரசரின் ஆணைக்குப் பணிவதைவிட வேறு வழியில்லை.
நீ அரசராக இருந்தால் என்ன செய்வாய்?
முதலாவதாக அடிமைகளுக்கு விடுதலை கொடுப்பேன்.
!
நீ இப்போது சொன்னதை மறந்து விடாதே.
நீங்க என்ன சொல்றீங்க?


இது இஸ்ரயேல். இதைக் கிழித்து பத்து குலங்களை உனக்குத் தரப் போகிறேன். என் ஊழியன் தாவீதின் பொருட்டு யூதாவை மட்டும் அவனது வழித் தோன்றல்களுக்குக் கொடுப்பேன்.
!?
எரொபவாம் அடிமைகளை அன்போடு நடத்துகிறான் எனக் கேள்விப்பட்ட சாலமோன் கட்டளையிடுகிறார்.
இறைவாக்கினர் தான் அவனிடம் அவ்வாறு செய்யச் சொன்னாராம்.
இறைவாக்கினரா?
எரொபவாமை உடனடியாக இங்கே அழைத்து வாருங்கள். அடிமைகளிடையே கிளர்ச்சியை உருவாக்க அவனுக்கு என்ன தைரியம்?


எனக்கெதிராக குரல் எழுப்பும் எவனும் சாக வேண்டும்.
அப்படியானால் உயிர் வாழ்வோர் நிறைய பேர் இருக்கமாட்டார்கள்.
?
நீ என்ன சொல்கிறாய்?
மக்கள் அதிருப்தியாக இருக்கிறார்கள். வீரர்களிடையேயும் நமக்கு எதிர்ப்பு உள்ளது. யூதாவை மட்டுமே நாம் இப்போது நம்ப முடியும்.
!?
ஒவ்வொரு கிளர்ச்சியும் நசுக்கப்பட வேண்டும். எந்த எதிர்ப்பையும் நான் அனுமதிக்க மாட்டேன்.

அரசருக்கு அஞ்சி எரொபவாம் எகிப்துக்குத் தப்பியோடுகிறார். சாலமோன் இறக்கும் வரை அவர் அங்கேயே தங்கியிருக்கிறார். காலம் செல்ல செல்ல எதிர்ப்புகள் இன்னும் அதிகமாகின்றன. கிளர்ச்சியை அடக்க சாலமோன் கடுமையான முறைகளைக் கையாள்கிறார்.





எழுபது வயதில் சாலமோன் இறக்கிறார். அவர் இஸ்ரயேலை நாற்பது ஆண்டுகள் ஆட்சி செய்கிறார். அவரது மகன் ரெகபெயாம் தொடர்ந்து ஆட்சி செய்கிறார். அவர் தந்தையைவிட மிகக் கொடியவராகவும், மக்களை அடக்குபவராகவும் இருக்கிறார். சாலமோன் அரசரின் அரசியல் ஞானம் அவனிடம் இல்லை. யூதா குலத்தைத் தவிர மற்றெல்லா குலங்களும் அவனுக்கெதிராக கிளர்ச்சி செய்கிறார்கள். எரொபவாம் எகிப்திலிருந்து திரும்பி வந்தவுடன் அவனைத் தங்கள் அரசராக ஏற்றுக் கொள்கிறார்கள். இவ்வாறு சாலமோனின் அரசு இரண்டாகப் பிளவுபடுகிறது. வடக்கே 'இஸ்ரயேல்' நாடும் தெற்கே 'யூதா'வும் தோன்றுகின்றன. சிலை வழிபாடும், எளியவர் ஒடுக்கப்படுதலும் தொடர்ந்து பெருகுகின்றன. தாங்கொண்ணா வேதனையில் இஸ்ரயேலர் யாவேயை நோக்கி குரல் எழுப்புகிறார்கள். கடவுளின் நீதியை அறிவிக்கவும், அனைவரும் மனம் திரும்ப அழைப்பு விடுக்கவும் கடவுளின் வார்த்தையை ஏந்தி வருகிறார்கள் இறைவாக்கினர்கள்.

அடுத்த மாமனிதர் **எலியா**

நகரங்கள் கிளர்ச்சி செய்து சுதந்திரம் பெறுகிறார்கள். இஸ்ரயேலிலும் போராட்டங்களும், புரட்சிகளும் வெடிக்கின்றன. யாவேயால் அனுப்பப்பட்ட இறைவாக்கினர்கள் சிலை வழிபாட்டையும் மக்கள் ஒடுக்கப்படுவதையும் எதிர்க்கிறார்கள். இவ்வாறு சாலமோனின் கீழ் இஸ்ரயேல் மக்கள் 'தூங்கிய எரிமலையாக' கொதித்தெழுகிறார்கள். சாலமோனின் இறப்புக்குப் பின் விபரீதமான விளைவுகள் ஏற்படுகின்றன.

சாலமோன் ஒரு ஞானமுள்ள அரசராக இருந்தாலும் சிலை வழிபாடு, சுகபோக வாழ்வு, அகந்தை யாவும் அவரது வீழ்ச்சிக்குக் காரணமாகின்றன. இறுதி நாட்களில் தன் வாழ்வில் எந்த அர்த்தத்தையும் அவரால் காண முடியவில்லை. "வீண், முற்றிலும் வீண், எல்லாமே வீண்" என புலம்புகிறார். சாலமோன் ஒரு எதிர்மறை மாதிரியாகிறார். உலக ஞானமும், யாருக்கும் விளக்கம் கொடுக்க தேவையில்லாத அபரிமித அதிகாரமும் அழிவுக்கும் ஏமாற்றத்திற்கும் ஒருவரை இட்டுச் செல்லும் என்பதற்கு சாலமோன் ஒரு சிறந்த உதாரணமாகிறார் எனலாம்.

கேள்விகள்


1. சாலமோன் எப்படி அரசரானார்?
2. பத்சேபாவின் முதல் குழந்தைக்கு என்ன நடந்தது?
3. சாலமோன் ஏன் அதோனியாவைக் கொன்றான்?
4. சாலமோன் யாவேயிடம் வேண்டிய ஆசீர் என்ன?
5. சாலமோன் எழுதியதாகக் கருதப்படும் விவிலியப்பகுதிகள், நூல்கள் எவை?
6. சாலமோனின் ஞானத்தைக் காட்டும் ஒரு உதாரணம் தருக
7. சாலமோன் ஏன் இஸ்ரயேலை 12 மாகாணங்களாகப் பிரித்தார்?
8. சாலமோனின் ஆட்சியில் மக்கள் ஏன் அதிருப்தி அடைந்தனர்?
9. சாலமோனுக்கு எதிராக கலகத்தைத் தூண்டிய இறைவாக்கினர் யார்?
10. சாலமோனின் வீழ்ச்சிக்கான காரணங்கள் யாவை?

விவிலியப் படக்கதைகள் (பழைய ஏற்பாடு)

1.காயின் & ஆபேல் 2. ஆபிரகாம் 3. யாக்கோபு 4. யோசேப்பு 5. மோசே 6. யோசுவா 7. சிம்சோன் 8. ரூத்து 9. சாமுவேல் 10. சவுல் 11. தாவீது 12. தாவீது அரசர் 13. சாலமோன் 14. எலியா 15. ஆமோஸ் 16. ஓசேயா 17. மீக்கா 18. எசாயா 19. எரேமியா 20. எசேக்கியேல் 21. செக்கரியா 22. யோனா 23. யோபு 24. தோபித்து 25. தானியேல் 26. சூசன்னா 27. எஸ்தர் 28. யூதித்து 29. மக்கபேயர்-1 30. மக்கபேயர்-2

அடுத்த மாமனிதர்

வனாந்தரத்தில் ஒரு சுழல் காற்று



எலியா

First published in English: Fr. Micheal Karimattam, Illustration: Devasy & Benny.
Published in Tamil: Elphin & Theo,
Centre for Biblical Publications, 243, III,Main Road,
Venkatraman Nagar, Hasthinapuram, Chromepet, Chennai 600 064.
Tel : 0091.9840214232, 9159928634, Mail: Celestialpub@yahoo.com.

JAMES ARTS, SIVAKAASI. 04562 - 278206